
# அல்லாஹ்வின் நியதி

பாடம் 10

சூரியன் உதிக்கின்றது; மறைகின்றது. சந்திரன் வளர்கின்றது; தேய்கின்றது. தாவரங்கள் முளைக்கின்றன; மடிகின்றன. மிருகங்கள் பிறக்கின்றன; இறக்கின்றன. இவ்வாறே மழை பெய்கின்றது; வரட்சியும் ஏற்படுகின்றது. இவை யாவும் அல்லாஹ் எமக்காகத் திட்டமிட்டு அமைத்தவையாகும். அத்திட்டத்துக்கு ஏற்ப அவை ஒவ்வொன்றும் இயங்குகின்றன. இந்த ஒழுங்கமைப்பையே நாம் 'கத்ர்' என்கிறோம்.

'கத்ர்' என்ற அறபுச் சொல்லுக்கு 'முன்னளப்பு' என்றும் 'நியதி' என்றும் பொருள் கூறுவர். அல்லாஹ்வின் நியதிப்படி, அவன் திட்டமிட்டதைப் போல எல்லாம் நடைபெறும் என்பது இதன் கருத்தாகும்.



பயிர் முளைக்கிறது என்பதற்காக நீர்ப்பாய்ச்சுவதில்லையா? உயிரிகள் வளர்கின்றன என்பதற்காக உணவூட்டுவதில்லையா? அதுபோல எல்லாம் அல்லாஹ்வின் நியதிப்படி நடக்கும் என்பதற்காக நாம் சும்மா இருந்துவிடக்கூடாது. அதற்காக நாமும் முயற்சிக்க வேண்டும். ஏனெனில், அல்லாஹ்வின் நியதி எப்படி இருக்கிறது என்பது அல்லாஹ்வுக்கே தெரியும். அது எமக்குத் தெரியாது. ஆகையால், நாம் எப்போதும் நற்காரியங்களையே செய்ய முயற்சிக்க வேண்டும்; பாடுபட்டு உழைக்க வேண்டும். அதற்கான அறிவையும் சக்தியையும் அல்லாஹ் எமக்குத் தந்திருக்கின்றான்; கடமைகளைச் செய்யுமாறு கட்டளையுமிட்டுள்ளான்; முயற்சித்து முன்னேறுவதற்கு அல்லாஹ் தனது நபிமார்கள், ரஸூல்மார்கள் மூலம் வழிகாட்டியுமுள்ளான். ஆதலால், நாம் எமது வாழ்வில் தொடர்ந்து முயற்சி செய்து கொண்டே இருக்க வேண்டும்.

எனவே, அல்லாஹ்வின் நியதியை ஏற்றுக் கொள்வோம். அவனது கட்டளைப்படி நல்லவற்றைச் செய்வோம்; நல்லவர்களாக வாழ்வோம்.

**நடப்பன அனைத்தும் அல்லாஹ்வின் நியதிப்படியே.**

## பயிற்சி

**பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் "சரி" என்ற சொல்லின் கீழும், பிழையாயின் "பிழை" என்ற சொல்லின் கீழும் கோடிடுங்கள்.**

1. கத்ர் என்ற அறபுச் சொல்லின் பொருள் முன்னளப்பு என்பதாகும். (சரி / பிழை)
2. சூரியன், சந்திரன், உலகம் முதலியன அல்லாஹ்வின் நாட்டப்படியே இயங்குகின்றன. (சரி / பிழை)
3. கத்ரை நம்பியவன் சும்மா இருக்காமல் முயற்சியும் செய்ய வேண்டும். (சரி / பிழை)
4. எமது கத்ரை நாம் அறிந்து கொள்ள முடியும். (சரி / பிழை)